1975 அக்டோபர் 27]

Performance of Small Industries.

* 76 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state—

(a) whether the Government was represented at the conference of the Ministers of the States convened by the Union Minister for Industries and Civil Supplies at New Delhi from 6th November 1974 to review the performance of the Small Scale Industries; and

(b) if so, the decisions taken at the conference?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: (a) & (b) A statement @ is laid on the Tablle of the House.

திரு. என். கே. பழனிசாமி: தலைவர் அவர்களே, மனுநீதி திட்டத்தின்கீழ் கோரிக்கைகளைப் பெறுகிறபோது மின்சாரம் ஒன்று பற்றித் தான் உடனடியாகச் செய்யப்படுகிறது. இன்னும் பிக் ஐயர்ன், டெக்னிகல் நோ ஹவ், மார்க்கெட்டிங் போன்றவைகளை ஆர்கனைஸ்டு லேபர் என்று இல்லாது ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரியில் கோடிக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்வதால் என்ன வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: நான் கொடுத்திருக்கிற பதில் 6—11—1974 இல் டெல்லியில் நடைபெற்ற முடிவுகள் பற்றி. இந்த ஆண்டு நடைபெற்ற மகாநாட்டில் உறுப்பினர் சொன்ன மார்க்கெட்டிங் பெஸிலிடீஸ் பற்றியும் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள், அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ரா மெட்டீரியல்ஸ் பற்றி—நிலக்கரிபற்றி பிரச்சினை அதிகமாக இல்லையென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. பரந்தாமன்: 1974 ஆம் ஆண்டில் சிறுதொழில் மகாநாட்டில் முன்னாள் தொழில் அமைச்சர் கலந்துகொண்டதாகத் தெரிகிறது. அந்த மகாநாட்டில் 2 லட்சத்திற்குக் குறைவாக முதலீடு செய்யப்படுகின்ற சிறு தொழில்களுக்கு டைனி யூனிட்ஸ் களுக்கு விசேஷ சலுகை தருவதாக முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. என்னென்ன விசேஷ சலுகைகளைக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை முன்னாள் தொழிலமைச்சராவது அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இரண்டு லட்சம் ரூபாய் முதலீட்டிற்குக் குறைவான சிறுதொழில்களுக்குத் தனிச் சலுகை அளிக்கப்பட வேண்டும் என்பது ஒரு சிபார்சு, It is a recommendation by the Board to the Government. அதுபற்றி பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

@ 650–652-ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1975 அக்டோபர் 27

திரு. ஏ. சுப்பிரமணியம் : I am rising on a point of order. இந்தக் கேள்விக்கு விவர அறிக்கை வைத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். என் மேசையில் அது இல்லை. என் அருகில் உள்ளவர் மேசையிலும் அது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பெரிய அறிக்கையாக இருந்தால் முன்கூட்டியே அவரவர்கள் இருப்பிடத்திற்கு அனுப்பப் படவேண்டும் என்று சொன்னதனால் நேற்றே அது அனுப்பப் பட்டிருக்கிறது. இதற்கு ஒரு பாயின்ட் ஆப் ஆர்டரா ?

திரு. நா. வீராசாமி : கொடுக்கப்பட்டிருக்கிற விவர அறிக்கையில் நாடு பூராவும் சிறிய தொழில் பிரிவுகளைப் பதிவு செய்வதில் ஓரே சீரான நடைமுறை இருக்கவேண்டும் என்று சொல்லப் பட்டிருக்கிறது. அத்தகைய சீரான நடைமுறை பின்பற்றப் பட்டிருக்கிறதா ? சிறு தொழில்களுக்கு இயந்திர தளவாடங் களுக்காக 10 லட்சம் வரை ஒதுக்கலாம் என்று சொல்லப்பட்டிருக் கிறது. ஆனால், நாட்டில் ரிசர்வ் பாங்கு 7.5 லட்சம் வரைதான் ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரிக்கு கொடுக்கப்படும் என்று சொல் கிறது. பத்து லட்சம் கொடுப்பதில்லை. ரிசர்வ் பாங்கோடு கலந்து பேசி 10 லட்சம் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நாடு பூராவும் ஓரே கொள்கை பின்பற்றப்பட வேண்டும் என்பதைப்பற்றி The Chairman of the Small-scale Industries Board felt that procedure for the registration and de-registration of small scale units should be uniform all over the country. The Government of India notified the revised procedure for registration and de-registration of small scale industries. Our Director of Industries and Commerce is following the same procedure to register and de-register Small Scale Industries. The Director of Industries and Commerce has been requested to take action on the lines indicated by the Government of India.

The Small Scale Industries Board has recommended that a small scale industry is one where the investment in plant and machinery is not exceeding 10 lakhs.

பத்து லட்சம்வரை சிறு தொழில்கள் என்ற கருத்துத்தான் தெரியப் படுத்தப்பட்டிருக்கிறது. இது சிபார்சு. மத்திய சர்க்கார் ஒப்புக் கொண்டால்தான் அதை அமலுக்குக் கொண்டுவர முடியும். இது மத்திய சர்க்கார் முடிவு செய்ய வேண்டிய விஷயம்.